# உன்னதரே பிறந்தீரே

வெண்பனிவிழும்
நடுநிசிப்பொழுதில்
உலகமெல்லாம் அமைதியில்
கண்ணுறங்க
உன்னதரே பிறந்தீரே

வானவர் கீதம் இசைத்திட
ஆவினங்கள் பாடிட
இடையர்கள் கேட்டிட
வல்லவரே பிறந்தீரே

கீழ்த்திசை ஞானிகள் மூவருமே
ஒன்றாய் கண்டனர் விண்மீனை
பொன்னும் சாம்பிராணியும்
வெள்ளைப்போளமும் காணிக்கை
பெற்றிட பிறந்தீரே

மாந்தர் நாமும் கூடிநின்று
உம்புகழ் பாடிடவும்
அனுதினமும் உம்வழி நடந்திடவும்
எம்மிடையே பிறந்தீரே

நாட்டிலும் உலகிலும்
நம் இல்லங்கள் எங்கும்
அமைதியும் அன்பும் மலர்ந்திடவே
இறைமகனே பிறந்தீரே

றூபா அன்ரன்
லொசான்
சுவிஸ் .